மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 193/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.பாண்டிசிவகாமி, கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : அமர்நாத் (பி.வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

05.03.2026

**<u>வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை –</u>**

1. வழக்கு பற்றி விபரம் தெரியுமா என்றால் தெரியும். எத்தனை லக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2லக்க சொத்துக்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1, 2 லக்க சொத்துக்களை 3ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு பவர் ஏஜெண்ட் ஸ்தானத்தில் எழுதிக் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். சசிகுமார் தற்போதும் எங்கள் நிறுவனத்தில்தான் வேலை பார்த்து வருகிறார். 2ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான், நான் இயக்குனர் என்பதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா சொத்து சொட்டமுறி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. சொட்டமுறி கிராமத்தை சுற்றி ஆதித்தநேந்தல், கண்டுகொண்டான்மாணிக்கம் கிராமத்திலும் சொத்துக்கள் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். மொத்தம் 500 ஏக்கர் வாங்கியிருப்போமா என்றால் தற்போது எவ்வளவு வாங்கப்பட்டுள்ளது எனக்கு தெரியாது. சொட்டமுறி கிராமத்தில் மட்டும் எங்கள் நிறுவனத்திற்கு எவ்வளவு ஏக்கர் உள்ளது என்றால் எனக்கு கணக்கில் எவ்வளவு என்று தெரியவில்லை. என்ன உபயோகத்திற்காக மேற்படி சொத்துக்களை வாங்கியுள்ளோம் என்றால் தோட்டம் அமைப்பதற்காக வாங்கியுள்ளோம். மூன்று கிராமங்களிலும் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளதா என்றால் மானாவாரி பயிர் செய்துள்ளோம்.

3. 1ம் வாதி முத்துமாரி தகப்பனார் பெயர் கருப்பசாமி என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் வழக்கறிஞர் தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை, என்னிடம் படித்து விளக்கப்பட்டது. 1வது இலக்க சொத்தை வாசாஆ3 ஆவணத்தின் மூலம் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். வாசாஆ3

ஆவணத்தின்அடிப்படையில் கருப்பசாமியிடமும், 1ம் பிரதிவாதியிடம் 26.06.2007ம் வருடம் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாசாஆ3 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி திருமுருகன் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். கருப்பசாமி மகள் 1ம் வாதி முத்துமாரி, மனைவி 2வது மீனா ஆகியோரிடம் சாட்சி கையொப்பமோ, கிரையமோ வாங்கவில்லை என்றால் சரிதான். 1வது லக்க சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்று பார்த்தோமா என்றால் நிறுவனத்தில் உள்ள சட்ட பிரிவில் பார்த்திருப்பார்கள். அந்த வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு எங்கள் நிறுவன வழக்கறிஞரிடம் பெற்ற சட்ட கருத்துரையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.1வது லக்க 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பூர்விக சொத்து என்றால் எனக்கு தெரியாது. 1வது லக்க சொத்திற்கு வேறு யாரும் உரிமைதாரர் உள்ளார்களா என்று விசாரித்தோமா என்றால் விசாரித்தோம்.

4. கிரையம் பெறுவதற்கு முன்பு என்னென்ன ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலகத்தில் பார்வையிட்டோம் என்றால் நான் அப்போது அங்கு இல்லாததால் எனக்கு தெரியாது. 1வது லக்க சொத்தானது மொத்தம் 2 ஏக்கர் 59 செண்ட் என்றால் சரிதான். வாசாஆ4 ஆவணம் மூலம் 2வது லக்க சொத்தை 17.12.2009ம் தேதி கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். வாசாஆ4 ஆவணத்திலும் கருப்பசாமி மகள் 1ம் வாதி முத்துமாரி, மனைவி 2வது மீனா ஆகியோரிடம் சாட்சி கையொப்பமோ, கிரையமோ செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2வது சொத்து மொத்தம் 44 செண்ட் கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

5. வாசாஆ5 ஆவணம் மூலம் 07.08.2013ம் தேதி 2ம் பிரதிவாதியும், 4ம் பிரதிவாதியும் பரிவர்த்தனை பத்திரம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பரிவர்த்தனையில் 1வது லக்க சொத்து மற்றும் சர்வே எண். 125/2ல் உள்ள சொத்தையும் சேர்த்து மொத்தம் 4 ஏக்கர் 92 செண்ட்டில் 2ஏக்கர் 19 செண்ட்டை பரிவர்த்தனை செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். இந்த 2ஏக்கர் 19 செண்டிற்கு சமமாக 4ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 2ஏக்கர் 19 செண்ட் நிலத்தினை கண்டுகொண்டான் கிராமத்தில் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

6. பிவாசாஆ3 ஆவணம் மூலம் 4ம் பிரதிவாதி கணவர் கருப்பசாமியும், 2ம் பிரதிவாதியும் பரிவர்த்தனை ஆவணம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் 2ம்

பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 1வது லக்க சொத்தில் வடபுறம் உள்ள 2ஏக்கர் 73 செண்டில் 74 செண்ட் கருப்பசாமிக்கு எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அப்படிதான் எனது நிரூபண வாக்குமூலத்தில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியின் கணவர் கருப்பசாமியை வழக்கில் சேர்க்கவில்லை என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். கருப்பசாமியை வழக்கில் சேர்ப்பதற்கு எனக்கு எந்த வித ஆட்சபனையும் இல்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் பாரா 9, 10 ல் தாவா 2வது லக்க சொத்தானது பொது அனுபவத்தில் இல்லை என்றும் அதற்கென செலுத்திய நீதிமன்ற முத்திரை கட்டணம் தவறு என்று எனது எதிர் வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. அதே பாராவில் 2019ம் ஆண்டு வாதிகளுக்கு பிரதிவாதிகளுடைய கிரையப்பத்திரங்களை பற்றி எந்த வகையில் தெரியவந்தது என்பதை பற்றிய எந்த விபரமும் பிராதில் இல்லை என்று சொல்லி உள்ள நிலையில் அந்த விபரத்தையும் எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. பாரா 4ல் 10 வருடங்களாக சரியான மழை பெய்யாததால் 1ம் வாதி தபசில் சொத்துக்களில் விவசாயம் செய்யவில்லை என்று சொல்லி உள்ளார்கள் என்றால் மழை பெய்யும்போது நாங்கள் விவசாயம் செய்துள்ளோம். அந்த சமயங்களில் 01.04.2019ம் தேதி 2, 4 பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்யும்போது தபசில் சொத்துக்களில் பிரச்சனை உள்ளதாக சார் பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்து பார்த்தபோதுதான் ஆவணங்கள் பற்றி தெரியவந்ததாக சொல்லி உள்ளார்கள் என்றால் நாங்கள் தான் விவசாயம் செய்துவந்தோம் எங்களிடம் பிரச்சனை செய்யவில்லை. 01.04.2019ம் தேதிக்கு பின்னர்தான் மோசடி ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது வாதிகளுக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்விக சொத்துக்களாக இருப்பதால் வாதிகளுக்கு 3ல் 2 பாகம் உள்ளது என்றால் பூர்விக சொத்து கிடையாது, அவருடைய பட்டா சொத்து ஆகும். வாதிகளின் உரிமையை பொறுத்து நாங்கள் எழுதி வாங்கிய கிரையம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

**4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–**

2ம் பிரதிவாதியின் நிறுவனம் தாவா 1வது லக்க சொத்து மற்றும் சர்வே எண். 125/2 சொத்துக்களைச் சேர்த்து மொத்தம் 4ஏக்கர் 94 செண்ட்டில் வடபுறம் 2 ஏக்கர் 19 செண்ட் நிலத்தினை 4ம் பிரதிவாதிக்கு பரிவர்த்தனை ஆவணம் செய்து

கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பதிலாக 4ம் பிரதிவாதி கண்டுகொண்டான் மாணிக்கத்தில் உள்ள சர்வே எண். 30/4 நிலத்தில் 2 ஏக்கர் 19ம செண்ட் நிலத்தினை 2ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

**6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

6, 7 பிரதிவாதிகள் மைனர்களின் தகப்பனார் திருமுருகன் தாவா 1வது லக்க சொத்தினை பொறுத்து கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை, அந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். 1ம் பிரதிவாதி திருமுருகன் எந்த கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்காததால் 6, 7 பிரதிவாதிகளுக்கு 1வது லக்க சொத்தை பொறுத்து பாகம் உள்ளது என்றால் சரியல்ல. தபசில் சொத்து 6, 7 பிரதிவாதிகளுக்கு பூர்விக பாத்தியப்பட்ட சொத்து என்றால் அவரது தாத்தா பெயரில் பட்டா இருந்தது. எங்களுக்கு கிரையம் கொடுத்த கருப்பசாமிக்கு தாவா 1வது லக்க சொத்து தனிப்பட்ட சொத்து என்றும் பூர்விக சொத்து கிடையாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, தனிப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு அந்த ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை கிரையம் பெறும்போது யாருக்கு பாத்தியம் உள்ளது என்பதை பரிசீலனை செய்யாமல் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.